# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889)
ஆவணி மாதம் 28-ம் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - கூச]  யாழ்ப்பாணம்:- நந்தன ஹூ புரட்டாதிமீ கக உ வெள்ளிக்கிழமை (26 Sept. 1952)  [இல - சகூ]


## நயினுதீவில் உபசாரணைக் கூட்டம்

டக்ரர் இராமச்சந்திர பாராச சோரத்திற்கு நயினைதீவுப் பொது மக்கள் ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணியளவில் ஸ்ரீ நாகபூஷணி வித்தியாசாலையில் வைத்து ஒரு பகிரங்க வரவேற்பளித்தனர். அத்தருணம் திருவாளர்கள் ச. அம்பிகைபாகன் B A, கா. விசுவலிங்கம், க. சிவசிதம்பரம் முதலியோர் டக்ரரின் குணுதிசயம் பற்றிப் பாராட்டினர். சிற்றுண்டி விருந்துடன் இசை விருந்தும் அளிக்கப்பட்டது. கூட்ட ஆரம்பத்தில் புகைப்படம் எடுத்தல், உபசாரப் பத்திரம் வாசித்தல் என்பனவும் நடைபெற்றன.

## அரசாங்கமொழி விசாரணை

அரசாங்க மொழி விசாரணைக் குழுவினருடைய ஆராய்ச்சி முற்றுப் பெறுகின்றதாகவும் அரசாங்கம் மேற்கொண்டுள்ள கொள்கைகளை அவர்கள் பொதுவாக ஆதரிப்பதாகவும் அறியவருகின்றது.

அது அப்படியிருக்க ஆரும் வகுப்புத் தொடக்கம் எட்டாம் வகுப்பு வரையில் தாய்மொழிகளில் தங்களால் படிப்பிகக முடியாதென்று 900 ஆசிரியர்கள் தெரிவித்திருக்கிருர்களாம்.

# மத வெறியும் அரசியல் ஆதிக்கமும்!

## அன்றுபோல்இன்றும் சமயமாற்றமா?

சில மாசங்களுக்கு முன்னே அகலவத்தைத் தோட்டத்திலும் அதன் பக்கங்களிலும் உள்ள தோட்டங்களிலும் வேலை செய்யும் தமிழ்த் தோட்டத் தொழிலாளர் ஐஞ்ஞூறு பேரும் பிறிதோரிடத்தில் இருநூறுபேரும் பௌத்த மதத்தைத் தழுவினுர்களெனப் பத்திரிகைகளிற் படித்தோம. இப்போ கிவிரிக்கலைப் பகுதியில் மூன்னூறு பேர் பௌத்த மதத்தைத் தழுவியிருக்கிருர்களென்று பத்திரிகைகள் கூறுகின்றன. இம்மதமாற்றம் எவ்வாறு நிகழ்கின்றது? குறித்த தொழிலாளர் ஒன்றுஞ் கினையாது தாமாகவே மதம் மாறினுர்களா அல்லது தங்கள் மத நூல்கள் கூறும் பொருள்களை ஆராய்ந்து பார்த்தவிடத்தில் அப் பொருள்கள் பிழையானவையெனவும் பௌத்த நூல்கள் கூறும் பொருள்களே சரியானவையெனவும் கண்டு பௌத்த மதத்தைத் தழுவினுர்களா? அல்லது பல மதப் பொருள்களையும் பாரபட்சமின்றி ஆராய்ந்த பண்புடையோர் போதனையைக் கேட்டு மதம் மாறினுர்களா? அல்லது மத வெறியோடு அதிகாரச் செருக்குற்றோர் தங்கள் அதிகாரப் பளபளப்பையும் அதிசயும் உலக இன்பங்களையும் காட்டி ஏழை மக்களை இருட்டுக்குள் ஈர்த்தார்களா?

### மதமாற்றமென்பது உலகப் பொருள் வேட்டையே

இவ்வினுக்களுக்கு விடையறிய முயலும்பொழுது, முன்னொருஞான்று நாவலர் பெருமான் யாழ்ப்பாணச் சமயநிலை எனப் பெயரிட்டுவிட்ட வெளியீட்டில் "இத்தேசத்துள்ள வறியவர்கள் அநேகர் சைவ சமயமேமெய்ச்சமயமென்று அறிந்தும், அன்னம வஸ்திரம் முதலியவை பெற்றுப் படிக்கும் பொருட்டும் உபாத்தியாய ருத்தியோகம்

வண்ணை
—சத்திய சீலன்—

பிரசங்கி உத்தியோகம் முதலிய உத்தியோகங்களைச் செய்து சம்பளம் வாங்கும பொருட்டும், கவர்மெணடு துரைமார்களிடத்தேசிபாரிசு செய்விக்கும் பொருட்டும், கிறிஸ்துசமயப் பெண்களுள்ளே சீதன முடையவர்களையும் அழகுடையவர்களையும் விவாகஞ் செய்யும் பொருட்டும, கிறிஸ்து சமயத்திலே பிரவேசிப்பாராயினுர்கள்" என்று கூறியிருத்தல் காணக் கிடக்கின்றது. இது அன்றுபோல் இன்றும் உண்மையாகவே யிருக்கின்றது. "இயேசுவில் நேசமுடைய ஒரு ஆத்துமா கவரப்பட்டு கிறிஸ்தவனுகி அதனுல கிறிஸ்தவ ஆசிரிய கலாசாலையில் சேருதல் முதலிய அனேக இம்மைக்குரிய சலாக்கியங்களைப் பெற்றுக்கொளவது பாவமல்லவே" என்கின்ருர் இந்துசாதன வெளியீடொன்றில் நல்லூர் சாதனுபாடசாலை ஆசிரியர் திரு. யே, ந. பொன்னையா அவர்கள். உலகப் பொருள் வேட்டையேயன்றி இது பிறிதொன்றல்ல வென்பது உண்மையறிந்தோர் பலரறிந்த இரகசியம். "இரண்டு எசமானகளுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனுலுங் கூடாது. ஒருவனைப் பகைத்து மற்றவ

ணைச் சினேகிப்பான். அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டை பண்ணுவான. தேவனுக்கும் உலகப் பொருள்களுக்கும் ஊழியஞ் செய்ய உங்களால் கூடாது" என்று கிறிஸ்துநாதர் தெளிவாகக் கூறியிருக்கின்ருர்.

இவ்வாறு உலகப் பொருள் வேட்டையில் எமமவர்களுடைய மனங்களை ஈர்த்தற்குக் காரணராயிருந்தோர் கிறிஸ்தவ பாதிரிமாரே யெனினும் கிறிஸ்தவ அரசாங்கமே அந்தரங்க காரணமாயிருந்திருக்கின்றது. அறிவு குறைந்த மக்கள்தான் என் செய்வர். உணவைத் தூண்டிலிற் கண்ட மீன்கள் மானிடர் சூழ்ச்சியை அறியுமாறின்றி உணவைப் பற்றுதலால் தம பிடிபடுகின்றன வல்லவா? என் செய்வர் அறிவிலார். மன்னனெவ்வழி மன்னுயிரவ்வழியல்லவா? மனமுபோயுக் துவானம் போக வில்லை எனறபடி கிறிஸ்தவ அரசாங்கம் போயும் முன்னர்க் கிறிஸ்து சமயத்தைத் தழுவிய எம் சகோதரர் அதனூர்ச்செயலை இனனமும நீடிக்கச் செய்து அனுபுக்கும ஒற்றுமைக்கும பங்கமுண்டாககி

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

# சுவாமி சுத்தானந்த பாரதியார்

## யாழ்ப்பாண வருகை

சுமார் இரண்டு ஆண்டுகட்கு முன் சுவாமி சுத்தானந்தபாரதியார் இலங்கைக்கு வரவிருந்தார், ஆனல் எதிர்பாராத சில காரணங்கள் அப்பொழுது அவர் வருகையைத் தடைசெய்தன. அடுத்து வரும ஐப்பசி மாத நடுப்பகுதியில் சுவாமிகள் கொழும்புக்கு வருவார்கள். யாழ்ப்பாணத்தில் சுவாமிகளை வரவேற்கும் ஒழுங்குகளை ஆலோசிப்பதற்கு, 18-9-52 இல் சைவ பரிபாலன சபை ஆச்சிரம நாவலர் மணடபத்தில் யாழ்ப்பாண வரவேற்புச் சபையார் கூடினர், அத்தருணம் சமுகமளித்த அன்பர், திரு. க. இராமச்சந்திரன் அவர்கள் 19-10-52 அளவில் சுவாமிகள் கொழும்புக்கு வரக்கூடுமென்றும் கண்டி மட்டக்களப்பு திருக்கோணமலை முதலி இடங்கட்குச் சென்று 18-11-52 வரையில் யாழ்ப்பாணத்திற்கு வருவாரென்றுக் தெரிவித்தார்; மேலும் அவர் சுவாமிகள் கதிர்காமம் திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம, நயினுர்தீவு, நல்லூர், கீரிமலை முதலிய இடங்கட்கு யாத்திரை செய்ய விருமபுகிருரென்றும் அவர் யாழ்ப்பாணத்தில் ஒரு வாரந்தான் தங்கக்கூடுமென்றும்கூறினர், சுவாமிகள் யாழ்ப்பாணத்தில் குறைந்தது இரண்டு வார காலமாவது தங்கவேண்டுமெனப் பல அன்பர்கள் விரும்பினுர்கள். இறுதியில் 10 நாட்களுக்குரிய நிகழ்ச்சித் திட்டமொன்று வகுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது யாழ்ப்பாணப்பகுதியில் உள்ள மக்கள் அனைவரும் சுவாமிகளின் வரவை மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கிருர்கள். சங்கங்களும், சபைகளும், பலமத ஸ்தாபனங்களும் அவரை வரவேற்பளிக்க உத்தேசித்துள்ளன. யாழ்ப்பாண வரவேற்புச் சபைக்கு டாக்டர், க. குருசாமி தலைவராகவும், திருவாளர்கள் ச. அம்பிகைபாகனும், செ. விசாகப்பெருமானும் இணைச்செயலாளர் பொருளாளர்களாகக் கடமையாற்றுவார்கள்.

விபரம் அறிய விரும்புபவர்கள் 'சுத்தானந்த பாரதியார் வரவேற்புச் சபைச் செயலாளர், வைத்தீசுவர வித்தியாலயம்,' யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு எழுதி அறியலாம்,

உ

## விண்ணர் நண்ணுகில்லாய்

கொம்பரில் லாக்கொடி போலல மந்தனன் கோமளமே
வெம்புகின் றேனை விடுதிகண் டாய்விண்ணர் நண்ணுகில்லா
உம்பருள் ளாய்மன்னு மூத்தா கோசமங் கைக்கரசே
அம்பர மேகில வேயனல் காலொடப் பானவனே.

அரசியல் அலை

# நெருக்கடி நிலைத்தலிலே விருப்பு

## எதிர்க்கட்சிக்கு இதுவா இலக்கணம்?

எல்லாரும் ஒப்புக்கொள்ளப்படுவதொன் றென்றுற் பொருளாதார நெருக்கடியே. அதனைத தீர்தது விடுதலிலே அகில உலகமும் தீவிரமாய் முயற்சி செய்கின்றது. இங்கேயும நெருக்கடி இருக்கிறதென்று அரசாங்கக் கட்சியும் எதிர்க் கட்சிகளும் ஒரே குரலில் உரைக்கின்றன. ஆனுல் அத்த நிலைமையைச் சமாளிக்க வேண்டுமென்றுல் வேற்றுமைபபாடு கிளம்புகின்றதே.

எதிர்க்கட்சியினர் நெருக்கடியிருக்கிறதென்று சொல்லத்தான் வேண்டும். சொல்லிப் பொதுசனத்தைத் தட்டி யெழுப்பவேண்டும். ஆவேசங் கொண்ட ஊரவர்கள அரசாங்கத்தை மாற்றியமைக்க வேண்டும். மாற்றி யமைக்கப்படும் அரசாங்கத்துக்கும் இதுவே விதியாகும் என்று சொல்ல வேண்டியதில்லை.

இந்த மனப்பான்மை சமீபத்திற் பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின் போது வெளியானது. நெருக்கடி தீரவேண்டி அரசாங்கம் அரிசி அளவைக் குறைத்துச் சீனிவிலையை உயர்த்திச் சில வரிகளைக் கூட்டியிருக்கின்றது. இதைப்பற்றிய விவாதததிலே எதிர்க்கட்சியினர் கலந்து கொள்ளார்களாம். காரணம் தாங்கள் கொண்டுவரும் கண்டனப் பிரேரணைக்குப் பாதகமாய் முடியுமாம். நோக்கம் தெளிவாகின்றது. வறுமை நீங்க அல்லது வளம் பெருக வேண்டியதில்லை. கணடனம செய்தல்வேண்டும், அரசாங்கம் மாறவேண்டும். இவ்வளவு தான்.

இதுவரை பத்திரிகைகளிலும் பகிரங்கக்கூட்டங்களிலும எதிர்க்கட்சியினர் தாஞ் சொல்ல வேண்டியன பற்றிச் சொல்லி விட்டார்கள். இப்போது பாராளுமனறத்தில் விவாதிக்கப் போதிய அவகாசங் கிடைக்கவில்லையாம். நாட்டின் நனமையை யார் கருதுகின்ருர்கள்?

## பலவித மணவினைத் தொகை வளர்ச்சி

1951-ம் ஆண்டில் நடந்த மணவினைத் தொகை சென்ற பத்து ஆண்டுகளில் எந்த ஆண்டில் நடந்தவற்றிலும் கூடியதாயிருக்கின்றதாம. மணஞ் செய்தோருள் ஆகக்கூடின வயதுப் பெண் 69 ஆண்டினரும் குறைந்தவயதுப் பெண் 12 ஆண்டினரும் கூடின வயசு ஆண் 74 ஆண்டினரும் குறைந்வ வயசு ஆண் 16 வயசினருமாயினர்.

சிங்கள மக்களுக்குந் தமிழ் மக்களுக்குமிடையே நடந்த மணவினைத் தொகை மிக அதிகரித்திருக்கின்றதாம்.

### சவ்வரிசி உற்பத்தி

சவ்வரிசி உற்பத்தியை இலங்கையில் அதிகரிக்கச் செய்தற்குச் சாதகமானநடவடிக்கைகளை உணவு விவசாயப்பகுதியார் உடனேஎடுப்பார்களென அறியவருகின்றது.

இதனுல் இறக்குமதித் தொடர்பில் நாட்டுக்கு வரக்கூடிய இலாபத்தோடு மரவள்ளிககிழங்குசசெய்கைக்கு ஊக்க மளிக்கப்படுவதுமாகும்.மரவள்ளிமாவின்பிரயோசனம் இலகே கவனிக்கத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS.

வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம்அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். நந்தன ஞூ புரட்டாதிமீ
கக உ வெள்ளிக்கிழமை

## ஆற்றல் வேண்டி - - அன்னையை நினைத்தல்

'நீயலாற் பிறிது மற்றின்மை' என்றும் 'நீயன்றி ஒன்றில்லை' என்றும் இலக்கணத்திற்கப்பாலாகும் எல்லாமாய இறையை ஞானிகள் இனிதுரைப்பர். அந்த அறிஞர்களே ஒப்புவமையில்லா ஒண்பொருளை நோக்கி 'உமையலாதுருவமில்லை' என்பர். மணியும் ஒளியும்போன்று; திங்களும் நிலவும் என்ன இறையும் இறைவியும் நிற்பர். என்னை? 'அருளது சத்தியாகும் அரன்தனக்கு அருளையின்றித் தெருள் சிவம் இல்லை அந்தச் சிவமின்றிச் சத்தி இல்லை' என்றும் 'எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்' என்றும் பிரமாண நூல்கள் பேசுதல் காண்க.

'உடலிலங்கும் உயிருள்ளளவுந் தொழ உளளத் துயாபோமே' என்று நின்று மிருந்துங் கிடந்தும் உமை ஒரு பாகனை உம்பர் நினைந்துய்ந்தனர். திருத்தொண்டர்கள் சிந்தைசெய்து சிவநெறியடைந்தனர். உயர் ஞானிகள் உள்ளத்தமைத் தண்மை கண்டனர். இப்பெறற்கரும் பேறடைந்தார்க்கெலாம் அவன்ருள் பணிய அவன் அருள் பொலிந்தன என்றும் அவ்வருள் அகிலமும் ஆகும் அன்னை ஆற்றலே என்றும் விரித்துரைக்க வேண்டுங்கொல். ஆட்டுவித்தாலன்றி ஆடாத மன்னுயிர்கள் தெய்வ ஆற்றல்பெருதெங்ஙன் உய்ந்தீடேறுதல் முடியும்? அப்பனிடம் வரம் வேண்டும் சற்புத்திரன் அன்னைபாற் சென்றவள் உளங் குளிரத் தொண்டாற்றி விரும்பியதைப் பெறுதலுலகியல்லன்ரோ?

எனவே கன்னித்திங்களிலாவது உலக அன்னையை உன்னுதல் வேண்டும், உள்ளத்துணருதல் வேண்டும், நற்கருமம் ஆற்ற ஆற்றல் பெறல் வேண்டும. ஆன்ரோர்கள், வாழ்க்கை முறையை நன்கு ஒழுங்கு செய்து ஒவ்வொரு வழிபாட்டுக்கும் உகந்த காலத்தை வகுத்து விதிகள் ஆக்கியுள்ளார்கள். மெய்ச்சமயத்துதித்த சைவ நன்மக்கள் நியமங்களைக் கிரமமாகச் செய்தல் கடமையன்ரோ? நேயர்களே நெஞ்சை விளித்து இங்ஙனம் ஆராய்ந்து பாருங்கள்.

நெஞ்சமே நினைத்திலையா பண்டு செய்த பழவினைப் பயனை? இன்னமுமா துன்பந் துடைத்துத்துயர் தீர்த்திட அறிகின்றிலை? உலகின்ற அன்னை உள்ளம் இரங்கமாட்டாளென்று கலக்கம் கொள்கின்றனைபோ? அஞ்சாதே. அகிலாண்ட நாயகி ஆநந்தவல்லி அல்லவா? அப்பனிடப்பாகத் தமரும் அம்பிகை அல்லவா? ஆகவே அன்பின் அவைக்களமல்லவா? ஆதரவின் அமைவிடமல்லவா? அப்பனுக்கும் அன்னையாகும் மனோன்மணி உமாதேவியல்லவா? அவளை நோக்கி ஆற்றல்பெருதென்ன தான ஆற்றப்போகின்றனை? ஆகலின் அன்னையைநினைமின் மனனே! வாழ்த்துமின் மனனே! தொண்டாற்றுமின் மனனே!

அழுதால் உன்னைப்பெறலாம் என்று அம்மை அப்பனைப் பாடி மணிவாசகனர் அவனைப் பெற்ருரல்லவா? நன்று புரிய மன்ருடியுடனின் ருடிடும் மாதுமையை நினைப்பாயேல் நல்லாற்றல் பெறுவாய். அறிவுநூல் கற்று உள்ளத் தெளிவுபெறும் ஓர் வித்துவசிரோமணியாய் விளங்கும் ஆற்றல் வேண்டும் என்றும் குணமென்றுங் குன்றேறி நின்று குவலயமோங்க நற்றொண்டாற்றும் பரோபகாரியாக வேண்டும் என்றும் மெய்மை மேவிய மெய்யன்பர்க் கன்பனுய்ப் பொய் தவிர்ந்து நிற்கும் உள்ளந் தருவாய் என்றும் இறைமறவா இதயம் ஈவாய் என்றும் நான்முகியை நாராயணியை நாயகியைப் பூரணியைப் புராதனியைப் புராந்தகியைப் புங்கவியை மாலினியை மாதேவியை மனம் மொழி மெய்யால் வாழ்த்துவாயாக.

# வாழ்க்கை வானில்

வளர்மதி

## என்றும் விழாக்காலம்!

வறுமைப் பிணியைப் பொறுக்க முடியாதென்ற முறையிடுதல் ஒரு மூச்சில்; களியாட்ட வைபவம் இன்ன இடத்தில் இன்ன நேரத்தில் நிகழும் என்று ஒலிபரப்பி விளம்பரக் கூச்சல் இன்னொரு மூச்சில! களியாட்டம் என்ருல் அது என்ன ஒன்று இரண்டா அல்லது பத்துப் பன்னிரண்டா? இல்லை. ஒவ்வொரு நாளும் ஒவ்வோரிடத்திலும்.

கல்லூரிக் கட்டட நிதிக்கும் களியாட்ட விழாத்தான், நூல்நிலையத்திற்கும அதுதான் சமூக கழகத்துக்கும் அப்படித்தான் வேறெந்தப் பொது அமைப்புக்கும அவ்வாறுதான். அவ்வளவுதானு வரவேற்பு நன்றி பாராட்டல் என்றின்ன வகையிற் களியாட்டங்கள். வேறு விருந்துகள் விளையாட்டுகள்.

இவை எல்லாம் எங்கே நடைபெறுகின்றன. வறுமை மிக்க உண்ணுவதற்குப் போதிய உணவு உற்பத்தி செய்யமாட்டாது மாரிவழங்காது நீர்வளங் குறைந்து நிலவளம் குன்றிய இலங்கையில், அரிசி அளவு குறைந்த அகவிலை ஏறிய, வரி தாங்கல் கூடிய இலங்கையில்.

இந்தக் களியாட்டங்களுக்குப் பணம் உதவுகிறவர்கள் யார். வரவுக்குள்ளே செலவு செய்யமாட்டாத கடன் இடரால் இன்னற்படுகிற ஒரு சதமும் அவம்போகக்கூடாத நிலையில் உள்ள இலங்கையர்களே! திருவாளர் பொதுசன மிருக்கிருரே அவர் காலையில் எழுந்தால் ஒரு களியாட்டச் சீட்டுக்குப் பணம் கேட்பாருடன் மோதுண்டு வாக்குவாதப்பட வேண்டும். வெளியே சென்ருல பள்ளிக்கூட மாணவர்கள் மோட்டார்வண்டி கிடைக்கும் பாடும் பெட்டி கிடைக்கும பேனுக்கிடைக்கும் என்று ஒரு சீட்டு வாங்கக் கேட்பார்கள். இன்னஞ் சில மனிதநியாலங்கள் செல்லப் புதிதாக அரசினர் பட்டம் பெற்றவரை வரவேற்கக்கூட்டம் வைப்பவர்கள் பண உதவி நாடுவார்கள். அடுத்தாற்போலச் சினேகிதர் சேர்ந்து ஒரு வீண் விருந்துக்குச் செலவிற் பங்கு தாங்க வேண்டுவார்கள். ஊரில் ஆர் மணம முடித்தால் என்ன, ஆர் அந்த உலகஞ் சென்ருல் என்ன

தொடர்ச்சி 3-ம் பக்கம்

# பாவம் என்ருற் பாதி, முக்கால் என்று உண்டா?

— வழிப்போக்கன் —

சின்னத்தம்பியும் சப்பையாவும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் பூசைகண்டு வழிபாடாற்றி வீட்டுக்குத் திரும்புகிருர்கள் அப்பொழுது நடந்த சம்பாஷணை:

சி: மதுபானம் மட்டாகச் செய்தால் பிழையொன்றுமிலலை யெனகிருர்கள் சிலர். கொலை, பொய், களவுபோன்றவை போல இது பிழையாகதாய் எனக்குத் தோன்றவில்லை. இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

சு: பண்டைக்காலத் தொடக்கம் கொலை, பொய், களவு, கள், காமம் என்கிற ஐந்தையும் பாவங்களுள்ளே பெரும் பாவங்களெனக் கருதிப் பஞ்சமா பாதகங்கள் என்று அவற்றுக்குப் பெயருமிட்டிருக்கிருர்கள் பேரறிஞர்களாகிய எங்கள் முன்னோர். பஞ்சமா பாதகங்கள் என்று சொல்வதனுல் ஐந்தின் தன்மையும் ஒன்றெனபது கருத்தல்ல. இந்த ஐந்தினுள்ளும் கொலை மிகக்கொடியது தான். அடுத்தது பொய். "ஒன்ருக நல்லது கொல்லாமை மற்றதன்பின்சாரப் பொய்யாமை நன்று" என்றருளிச் செய்திருக்கின்ருர் திருவள்ளுவநாயனுர். இந்தத் திருக்குறளிலே கொலை முதலாம் படி பொய் இரண்டாம்படி என்று காணக்கிடக்கின்றதல்லவா? அப்படி மற்றப் பாவங்களுக்கு மிடையே வித்தியாசஞ் சொல்லலாம். ஆனுல் மதவுண்ணலும் பெரும் பாவமேயென்பதை மறக்கக்கூடாது.

சி: மட்டாக மதுபானஞ் செய்கிறபொழுது என்ன தீமை வருகிறது? ஆருக்குத் தீமை உண்டாகிறது? அப்படி ஒன்றும் எனக்குத் தெரியவில்லையே. இப்படிப்பட்டதையும் பெரிய பாவமென்று சொல்வதின் கருத்தென்ன? இதைப்பற்றியும் தயவுசெய்து சிறிது சொல்லுங்கள்.

சு: நீர் மாத்திரமல்ல இப்படி நினைக்கிறவர்கள் பலர் இருக்கிருர்கள்தான். இந்தத் தொடர்பில் ஒரு விஷயம் முதலாவதாக அறிய வேண்டியது. பாவம் என்ருல் அது என்ன என்று அறிந்தாற்ருன் மிகுதி விளங்கலாம். தனக்கோ பிறருக்கோ இன்பத்துக்கு ஏதுவாயிருப்பது புண்ணியம் என்றும் தனக்கோ பிறருக்கோ துன்பத்துக்கு ஏதுவாயிருப்பது பாவமென்றும் சொல்லப்படுட. மதுபானம் பொதுவாகத் தனக்கும் பிறருக்கும் துன்பத்துக்கேதுவானது. மட்டானது என்று தொடங்கிக் காலகதியில் மானமிழந்த வெறியராய் மாறுதல் உலக அநுபவத்திற் காணலாம். அது ஒருபுறம். மட்டானது என்றபோதிலும் அது மதிவிளக்கத்தைக் குறைப்பது எனபதிற் சந்தேகமில்லை. அறிவு விளக்கம் குறையக்குறைய வாழ்க்கையின் பல துறைகளில் வேண்டிய தெளிந்த காட்சி அற்றுப்போகும இந்த நிலைமையில் மககட் பிறவி எடுத்த ஒருவர் மாக்களின் பிரிவை — மிருகங்களின் இனத்தைச் சேருகிருர். மானிடப் பிறவியாலடையக்கூடிய பெரிய இன்பத்தை இழந்து துன்பத்துக்குள்ளாகிருர். இதை இன்னும் விரித்து விளக்கலாம். நாங்கள் பிரிந்து போகவேண்டிய இடம் வந்துவிட்டது மற்றக்கிழமை பார்ப்போம்.



அறிவெனும் அம்மே!

# ஆரணியே!

கலையமுதக் கருணை பொழியுஞ் சகலகலா வல்லியை நல்லறிவு அருள நாடுவோமாக.

உ

தனந்தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தருநெஞ்சில் வஞ்சமில்லா
வினந்தரு நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபி ராமி கடைக்கண்களே.

## தென்மராட்சி இயந்திர வண்டிப் பிரயாணிகள் சங்கம்

செவ்வாய்க்கிழமை 23-9-52பிற்பகல் 5 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் தென்மராட்சி இரந்திர வண்டி (பஸ்)ப் பிரயாணிகள் கூட்டமொன்று சாவகச்சேரி இந்துக்கல்லூரித் தலைமை ஆசிரியர் திரு A. S. கனகரத்தினம் அவர்கள் தலைமையில் நடந்தது. பஸ் பிரயாணிகளின் வசதியீனங்களை நீக்கி, வேண்டிய வசதிகள் செய்யும்பொருட்டு ஒரு சங்கம் நிறுவப் பெற்றது. உத்தியோகத்தர் தெரிவு பின்வருமாறு நிகழ்ந்தது. திரு A. S. கனகரத்தினம் தலைவர் உபதலைவர்கள் திருவாளர்கள் V. S. கார்த்திகேசு, S. K திரவியநாயகம், V, விநாயகமூர்த்தி, R. D. சிவகுரு, V. கனகசபை. காரியதரிசி திரு. C. முருகரத்தினம் இவர்களுடன் பதினலு பேர் நிருவாகசபை அங்கத்தவராகவும் தெரிவு செய்யப்பெற்றனர்.

## அரசாங்க மேற்சபைத் தலைவர்

அரசாங்க மேற்சபைத் தலைவராக Dr. N. ஆறுமுகம் அவர்கள் தெரிவு செய்யப்பெற்றிருக்கிருர்.

## மாயாவரத்தில் மழைக்கு வேண்டுதல்!

மழையின்மை மக்களை வருத்துகின்றது. இந் நிலைமையில் இறைவன் திருவருளேயன்றி மக்களைக் காக்கக்கூடியது வேருென்றுமின்மையால் மழை பெய்யுமாறு இறைவனை வேண்டுதல் செய்ய வேண்டுமென்று தருமபுர ஆதீனம் மகாசந்நிதானம் அவர்கள் மக்களுக்கு மதிமொழி கூறியிருக்கின்ருர்.

## மாகாண வித்தியாதிகாரிகளுக்கு விசேட பொறுப்பு

வித்தியாபகுதியார் கொழும்பிலே கவனிக்கும் சில விசேட பொறுப்புக்களை மாகாண வித்தியாதிகாரிகளிடம் விடத் தீர்மானித்திருக்கின்றனர். இத்தீர்மானத்தின்படி ஆசிரியரையமைத்தல், தற்காலிக ஆசிரியரை அமைத்தல், மாகாணத்துள்ளே மாற்றுதல் முதலியன மாகாண வித்தியாதிகாரிகள் செய்வர்.

## நாவலப்பிட்டியில் நவராத்திரி பூசை

நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியில் ஒன்பது இரவுகளும் சக்தி வழிபாடு நடைபெறுகின்றது. 19 9 52 வெள்ளிக்கிழமை ஆரம்பமான விழாவில் தோத்திரப் பாடல், கூட்டுவழிபாடு, மணவர் உபந்நியாசங்கள் இடம் பெற்றன. கல்லூரி அதிபர் க. ச ஆனந்தர் B A, B. O L விழாவை ஆரம்பித்துப் போசுகையில் நவராத்திரியின் மகிமையையும, சக்தி வழிபாட்டின் அவசியத்தையும் விளக்கிப் பேசினர். மேலும் வெவ்வேறு சமயத்தவர்களும், மேல நாட்டினரும் கூடத் தங்களுக்குரிய கலைத் தெய்வத்தை வணங்குவதையும், சரஸ்வதி பூசையின் மகிமையையும் விளக்கினர். பிரார்த்தனையுடன் விழா இனிது நிறைவெய்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆபிரிக்கச் சர்வகலாசாலை வெள்ளை மாணவர் சட்டமறுப்பு ஆதரவு

ஆபிரிக்காவின் மிகப்பெரியதாகிய விட்வாட்டேஸ்ரூன்ட் சர்வகலாசாலை வெள்ளை மாணவர் ஆபிரிக்கரின் சட்டமறுப்பு இயக்கத்துக்கு ஆதரவுகொடுக்கின்றனர். இதனால் அரசாங்க உதவிப்பணத்தைச் சர்வகலாசாலை இழக்கவேண்டி வருமென்று அரசாங்கத்தார் அச்சுறுத்துகின்றனர். அது அப்படியிருக்க வெள்ளை மக்களின் ஆதரவு வெளியேயும் பரவத்தொடங்குகின்றது.

## அரசாங்க உணவு விற்பனை நிலையங்கள்

கொழும்பு முதலிய பெரிய பட்டினங்களிலே அரசாங்க உணவு விற்பனை நிலையங்கள் அமைத்தற்கு உணவு விவசாயப்பகுதி மந்திரி சேர். ஒலிவர் குணதிலக ஒழுங்கு செய்திருக்கின்றார். இந்நிலையங்களில் கோதுமைமா, சோளன், குரக்கன், முதலியவற்றிற் செய்யப்பெற்ற உணவு வகைகள் விற்கப்படும். இவ்வாறு செலவு குறைந்த உணவு வகைகளை ஆக்கி அரிசி நெருக்கடியை நீக்குதல் அரசாங்கத்தின் நோக்கமாகும்.

# நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

கருகல் கண்ட

## திருக்குறள் மாணவருக்கு விடை

### மறைப் பொருள் மேற்கொண்ட காதலை [திருக்குறளுரையுடன்.முட்டவைத்தல் தக்கதன்றும்

தமிழ் மொழியின் தனிச்சிறப்பினை அறிந்து அம்மொழியிற் பல்இப் பரந்து விளங்கும் அறிவுதரும் நூல்களைப் படித்தறிந்து அதற்குத்தக ஒழுகும் தமிழ் மக்கள் அருகி மேல்நாட்டு ஆங்கில மோகத்தால் நவநாகரிக நாசவழியில் சென்று கொண்டிருக்கும் நம்மவரிடைத் தமிழ்நூற் பெருவளத்தின் மாண்பினை ஆராயும் மதிநலம் படைத்த மாணவரும் சிலர் உளர் என்பதனையறிய உவகையடையாதிருக்க முடியாது திருக்குறள் மாணவர் என்ற பெயர் புனைந்து நின்று சில ஐயங்களை எழுப்பி அதனை விளக்குமாறு கேட்கும் நேயருக்குச் சில கூற விழைந்தனம்:— எனது பிறப்பு வள்ளுவனின் மறுபிறப்பன்று. எனவே யான் கூறுவதே முடிந்த முடிபென ஏற்குமாறு எவரையும் வேண்டிக்கொள்ளவுமில்லை. குறட்பாக்களின் அறிவுரையில் படிந்த எனதுள்ளம் என் ஆற்றலுக்கெட்டியவரையில் அருங்குறள்கள்பற்றிச் சில எழுதுமாறு பணிக்கவே அப்பணியை மேற்கொண்டு என் சிந்தனைக்கு எட்டியவரையில் உயர்ந்தோர் கூற்று இதுவாதலேசாலும், இதுவே பொருத்தமுடையது எனத் துணிந்துரைக்க முற்பட்டுள்ளேன்.

எனதுரையில் கருகல்கண்ட அன்பர், இன் யமையாதன பழிபடவருவன எனினும் அவற்றைத் துணிந்து செய்க என அவநாகரிகப் பண்புரைத்து, நாகரிக மக்களின் சீர்நிலையைக் கெடுக்கும் ஆரியரின் மறைவழக்கை மறுத்துத் தமிழன் தன்னறிவாற் பெருமை பெற்று விளங்கவேண்டுமென்ற பெருநோக்கால் தமிழனின் தனிச்சிறப்பு விளங்க, அருங்குறள்களால் அறிவுரை கூறிய வள்ளுவனுள்ளத்தை அவன் வெறுத்தொதுக்கிய ஆரிய நூல்களுடன் தொடர்புபடுத்தி உரைத்தல் வேண்டும் என விழைகின்றார். வள்ளுவன் குறள்கள் எந்நோக்கங்கொண்டு ஆக்கப்பட்டன என்பதனை ஆசிரியர்கள் மாட்டு அறிந்திலர்போலும். அன்றித் திருக்குறள் மாணவரெனப் பெயர் பூணுவதால் பெருமை உண்டு என எண்ணி ஆரிய நூல்களிடத்தில் வைத்த பற்றுள்ளததால் உண்மை உணர்வின்றித் தடுமாற்றமடைதலும் இயல்பே.

5–9–52 ல் வெளிவந்த கட்டுரையில் எழுத்துமொழி என்பன சடப்பொருளகள சடப்பொருள் அழியுந்தன்மையது. அழிந்தொழியப் போவதில்லை என்பது எத்தன்மையைத் தெரிப்பதென்பது விளங்கவில்லையென்கிறார். எழுத்துக்களும் அவற்றாலாம் மொழிகளுமே அழிந்தொழியாத் தன்மையுடைய உயிர்களின் இயக்கத்தை உணர்த்திநிற்கும் உயிர்ப்பொருளாக விளங்குகின்றன. உயிர்ப் பொருள்கள் உள்ளவரை 'அ' என்ற எழுத்தொலியும அழிதலில்லை எனவே உலகுள்ளவரை - தமிழினம் உள்ளவரை அழியும் நிலையுடையதென நாமறிந்த மொழிக்கூட்டத்துள்ளே 'அ' என்ற எழுத்தை முதலாகவுடைய தமிழ்மொழி தோன்றிய காலந்தொட்டு இதுவரை அழியாது நிற்பதுகொண்டே இனிமேலும் அழிந்தொழியப் போவதில்லை எனத் துணிபுரை கூறல்சாலும். தமிழ்மொழி ஆரியம் போன்று வீழ்ச்சியுறாது வளர்ச்சியடைவதையே காண்கின்றோம். 9-9-52 ல் வந்த கட்டுரையில் இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தோராதற்கு இருவினையும் நீக்கி வாழ்தல் வேண்டும எனப்பொருள்தருங்கூற்று விளங்கவில்லை எனவுரைக்கின்றார். இருவினை நீக்கும் வேலை மனிதனுக்குரியதா அன்றிக் கடவுளுக்குரியதா? கொலைசெய்தல் முதலாம் அடாப் பழிபுரியும் ஒருவன் கடவுளின் உண்மைத் தன்மையை அறியுந் திறமுடையனாதல் எங்ஙனம்? பழித்தொழிலிச்சை மேற்படுமேயன்றிக் கடவுளையறிதலில்லை. எனவே இருவினையும் விடாது செய்யுமொருவன் இறைவனின் பொருள்சேர் புகழ் புரிந்தோனாதல் இயலாமையே அறிவுடையோன் காண்டல் கூடும். எனவே இருவினையும் நீக்கிவாழு மொருவன் இறைவன் பொருள் சேர் புகழ் புரிந்தோனாதலன்றி, இருவினை விழைவோன் மெய்ப் பொருளுணர்தலில்லை என்பதே எனது துணிபு அன்றி பொருள்சேர் புகழ் புரிதல் முன்னும் அதனால் இருவினை நீங்குதல் பின்னும நிகழ்தல் முடியாது.

வித்துவான்

த. வடிவேலு

சுந்தர்படம்.

## 1951-ம் ஆ. ஆகஸ்ட் மீ முதல் 1952ம் ஆ. யூலாய்மீ 31 முடிய நயினுதிவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வரவு செலவுக் கணக்கு

| பற்று வரவு | நுபா. | சதம். |
| --- | --- | --- |
| கடைவாடகைவரவு | 1744 | 49 |
| செளலக்காணிக்கை | 786 | — |
| ஸ்கந்தசஷ்டி பூசை | 99 | 96 |
| மாதாந்த அர்ச்சனை | 290 | — |
| அடிமைச்சாதனம் | 144 | — |
| திருவிழாக்காணிக்கை | 11547 | 05 |
| சகஸ்திரநாம அர்ச்சனை | 2087 | 05 |
| மூலஸ்தானம்சாத்து | 1581 | — |
| அபிடேகம் | 727 | 13 |
| பூசை வரவு | 6268 | 50 |
| மாதாந்தக்காணிக்கை | 7696 | 53 |
| வாக்காளர் | 480 | — |
| மீசவரி நெல்காணிக்கை | 996 | — |
| தண்ணீர்வார்ப்பு | 42 | 29 |
| அர்ச்சனைத் தேங்காய்க் குத்தகை | 25 | — |
| நயினுதீவு நெல் காணிக்கைகள் | 10 | — |
| அன்னப்பிராசனம் | 105 | — |
| கர்ணவேதனம் | 68 | — |
| தென்னந்தோட்ட | 256 | 02 |
| | 34954 | 02 |

| பற்று | நுபா | சதம் |
| --- | --- | --- |
| மகாநவராத்திரித் திருநாள் செலவு | 314 | 89 |
| திருவெம்பாவை பூசைச் செலவு | 147 | — |
| சம்பளச் செலவு | 7448 | — |
| பொதுச் செலவு | 608 | 34 |
| திருவிழாச் செலவு | 5984 | 49 |
| 5694ம் இலக்க வழக்குச் செலவு | 1560 | 01 |
| பூசைச்செலவு | 2817 | 77 |
| படித்தரச் செலவு | 2133 | 91 |
| திருப்பணிச் செலவு | 613 | 55 |
| இடஸ்றேசனறிச் செலவு | 582 | 72 |
| வருட வரவு | 12743 | 34 |
| ஆக வரவு செலவு | 34954 | 02 |

### 1951ம் ஆ. ஆகஸ்டு மூ முதல் 1952ம் ஆ. யூலாய் 31உ முடிய நயினுதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் இருப்புவிபரம்

| வரவு | ரு. | சத |
| --- | --- | --- |
| ஸ்ரீநாகபூஷணி அம்மன்கோவில் | 37787 | 98 |
| கா.பொன்னம்பலம்வரவு | 80 | 94 |
| ஷை ,, ,, | 847 | — |
| ஷை ,, ,, | 237 | 45 |
| விவேகானந்தாபிறஸ் | 38 | — |
| செ. ஐயாத்துரை | 43 | — |
| வே. கந்தையா | 50 | — |
| K. சபாபதிப்பிள்ளை (காரம்பன்கிழக்கு) | 1104 | — |
| வெள்ளி | 818 | 85 |
| வருடவரவு | 12743 | 34 |
| | 53750 | 56 |

| பற்று | ரு. | சத. |
| --- | --- | --- |
| தவபாடம் | 11354 | 91 |
| திருவாபரணநகைகள் | 7362 | 50 |
| விக்கிரகமூர்த்திகள் | 122 | 75 |
| வாகனம் | 4784 | 75 |
| உள்வீதி கொட்டகைத் திருப்பணி | 17360 | 68 |
| பவுண் கொள்முதல் | 469 | 65 |
| பசுமடு | 30 | 70 |
| நெற் கொள்முதல் | 1170 | 15 |
| 5691ம் இலக்க வழக்கு அப்பில் பிணை | 200 | — |
| மு. சி துரைச்சாமி | 521 | 50 |
| V. A. துரையப்பா | 700 | — |
| V. விசுவலிங்கம் புங்குடுதீவு | 147 | — |
| S. N. கந்தையா | 143 | — |
| பலபெயர்வழிகள் | 2878 | 68 |
| யாழ்ப்பாணக்கச்சேரி இருப்பு | 525 | 38 |
| யாழ்ப்பாணம் மேற்கண்டயில் டேக் | 515 | — |
| ரொக்க இருப்பு | 5463 | 91 |
| | 53750 | 56 |

( M. 124 26—9—52. )

## வாழ்க்கைவானில்....

2-ம் பக்கத் தொடர்ச்சி

இவரும் ஒரு சிறிது கொடுத்தாகவேண்டும்.

இது சொந்த முறையில். அரசாங்கத்தார் விடுவரர்களா அவர்கள் வரிகள் ஒருபுறம். ஆகவே பணம் எங்கே போகின்றது? குத்தகைப் பணங்கொடுக்க முடியாதவர்களுக்கு உதவி புரிகிறார்களா? பள்ளிக்கூடத்திற்குப்பிள்ளைகளை அனுப்ப ஆடை புத்தகங்கள் இல்லாது பரிதவிக்கும் ஏழைப் பெற்றார்களுக்கேனும் துணை செய்கிறார்களா? உண்ண உணவின்றி இருப்பவர்களுக்கு ஊண் கொடுக்கின்றார்களா? உறங்க இடமின்றி தள்ளாடும் வயோதிபர்களுக்குத் தங்குமடங்கட்டுகிறார்களா? ஆலயங்களில் நித்திய நைமித்தியங்கள் செவ்வனே நிகழ வழி தேடுகிறார்களா? இல்லை. எங்கே போகிறது பணம் வீண் ஆளிபாட்டிலல்லவா. அவ்வாறிருந்தும் ஏன் இலங்கையில் வறுமைப் பிணியென் றிவர்கள சொல்லவேண்டும்!

## கற்றவர்க்கழகு கசடற மொழிதல்

# உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

### இவ்வாரப் பலன்கள் 28—9—52—4——10—52

**மேடராசி அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.**

காசுக் கொடுக்கல் வாங்கலுக்கு நல்ல காலம். ஆனல் மனச்சமாதானமிராது. சிறு உத்தியோகத் தொந்தரவுகளுக்கு மிடமுண்டு. வாக்குவாதத் தன்மைகளைத் தவிர்க்கவும்.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

வாரத்தின் முதல்நாள் பெரும் ஆபத்துக்களை விலைக்ககூறும். தேகசுகம் சிறிது காலத்துக்குக் கஷ்டமான நிலைமையைத் தரும். குடும்பத்தொந்தரவுக்கும் செலவுகளுக்குமிடமுண்டு.

**மிதுனராசி மிருகசீரிடம், 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

முதல் மூன்று நாட்களுக்கும் உமது பொறுமையை அதிகம நெருக்கும். அதிக கண்டனங்களையும் அவமானங்களையும் எதிர்க்க வேண்டிவரும். வாரமிறுதி புது முயற்சிகளுக்கு நல்லகாலம்.

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

இந்தவாரம் உம்முடைய காரியங்களில் அதிக திருத்தத்துக் கிடமுண்டு. போட்டி விடுவோரை [illegible] செவ்வாய் பிற்பகல் புதன் வியாழன் சிறிது கோபத்தை உண்டாக்கக்கூடும. ஆனல் அது அதிக தீமை செய்யாது.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.**

வியாபார முயற்சிகள் நல்ல பலனைத் தரும். ஆறுதல் அல்லது மனச்சமாதானம் இராது. வியாழன் பிற்பகல் வெள்ளி சனி கவனமாகக் கழிக்கவேண்டும்.

**கன்னிராசி உத்திரம் 2 3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

இந்தவாரம் இனத்தவர்கள் அதிக செலவையும் சலனத்தையும் உண்டாக்குவார்கள். புது முயற்சிகள் விருப்பிய விரும்பிய நன்மையைத் தரா. வாக்குவாதத்தையும் பிழையான விளக்கத்தையும் தவிர்க்கவும்.

**துலாம சித்திரை 3.4ம பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்**

புது முயற்சிகளுக்கு நல்லவாரம். சமூக சித்தியும் குடும்ப சமாதானமும் நிச்சயம். சகோதர சகோதரிகள் அதிக உதவி செய்வார்கள், உம்முடைய திட்டங்களை முன்னேற்றுக.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.**

இந்தவாரம் விரைந்து சண்டைகள் தொடங்குவீர். உமது சித்தி எதிர்பாராத இடத்தில் பகை விளைக்கக்கூடும். செலவம் அதிகரிக்கும் கோபத்தை அடக்குக.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 ம் பாதம்.**

இந்தவாரம் தேகசுகம் விசேஷமாய்க் கவனிக்கப்பட வேண்டும். பெரும் பொறுப்பேற்று மிகுந்த வேலை செய்யவேண்டிவரும். வார இறுதியில் குடும்பத் தொந்தரவுண்டாகக்கூடும்.

**மகரராசி உத்தாடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

இந்தவாரம் வரவு செலவு சமாளிப்பது கஷ்டமாயிருக்கும், இரகசியப் பகைவரால் தொந்தரவுக்கு மிடமுண்டு. வாரஇறுதி பணத்துறையைப்பற்றிய சில சந்தோஷமான புதினத்தைத் தரும்.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம, பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

செலவான வாரமாயிருக்கக் கூடும். செய்த சில விசேஷ திட்டங்களை மாற்றவேண்டி வரும். புதுமுயற்சிகள் தாமதிக்கக்கூடும்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

குடும்பத் தொந்தரவைத் தவிர இது நல்ல வாரமாயிருக்கக் கூடும். புதுமுயற்சிகளிற் சித்திக்கும் பகை பகைவரழிவுக்குமிடமுண்டு. வார இறுதியில் கடலுக் கப்பாற்பட்ட இடங்களிலிருந்து நல்ல புதினம் நிச்சயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத வெறியும் அரசியல் ஆதிக்கமும்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மென்மேலும் பொய் வாழ்க்கையைப் பரவச் செய்கின்றுர்களே! எம் சமூகம் பொய்யர்கள் மலிந்த சமூகமாகின்றதே!

### பொய்யர் மலியச்செய்யும் உதவி

இது இப்படியிருக்க அரசியல் ஆதிக்கம்பெற்ற எம் புத்த சகோதரர் தொடங்கியிருக்கின்றுர்கள தங்கள் தொழிலை. என்ன? ஒன்று பத்தல்ல, நூறுநூறு ஆயிர மாயிரமாகுமாறு, சாதாரண வாழ்க்கையிலே சரிபிழையறியா ஏழைத் தோட்டத் தொழிலாளர் மத ஆராய்ச்சி செய்து புத்த மதத்தின் சிறப்பைக் கண்டு புத்த மதத்தைத் தழுவியிருக்கின்றுர்களாம்!! என்னே அதிசயம்? பொய்யைப் பெருக்கி நாடுமுழுவதும் பொய்யரே மலியச்செய்தற்கு வேறு எதுவும் சிறந்த வழி நினைக்கவும் வேண்டுமா? இந்த நிலைமையை உற்று நோக்கும்பொழுது நாடு முழுவதும் தீமையே பெருகி மக்கள் யாவரும் அறிவீனராய் ஆற்ருெணுத் துன்பக் கடலுள் அமிழ்ந்துங் காலம் அண்மையில் வருகின்றதென்றே தூய அறிவினராயினேர் யாவரும் செப்புவர்.

### உண்மைத் தொண்டர் உதவிபுரிவார்களா?

வெள்ளம் வந்து விட்டது! இப்போதாயினும் வேண்டுவன விரைந்து செய்தற்கு உண்மைத் தேசத்தொண்டர் முன் வருவார்களா? அல்லது

"பொருளல்ல வற்றைப்
பொருளென் றுணரு
மருளாணு மாணுப் பிறப்பு"

என்றபடி நாடுமுழுவதும் அறிவீன இருள் பரவித் துன்பக் கடலுள் அமிழ்ந்தும் நிலைமையை நேரே கண்டும் வாளாவிருப்பார்களா? சத்திய நெறியைக் கடைப்பிடித் தொழுகும் தேசத்தொண்டர்கள் ஒருபோதும் வாளா விருக்கமாட்டார்கள். சத்திய நெறியை வளர்க்க முன்வந்த சபைகள் ஒருபோதும் வாளாவிருக்கமாட்டா? சைவபரிபாலன சபையார் முன்மாதிரி காட்டுவார்களா?

---

திருத்தொண்டர் திருநாள்

# திருநீற்றைக் கண்டு செயலற்று நின்ற தொண்டர்

## ஏனுதிநாயனுரின் இறை நெறி

சோழமண்டலத்திலேஎயினனுரிலே சான்ருர் குலத்திலே திருவவதாரஞ்செய்த திருநீற்றிலே மிகுந்த பத்தியுடையவராய் ஏனுதிநாத நாயனுர் வாழ்ந்தார். அவர் அரசர்களுக்கு வாள் வித்தை பயிற்றி அதனுல் வரும் பொருளைச் சிவனடியார்களுக்குக் கொடுப்பாராயினர்.

வாள்வித்தை பயிற்றுதலில் இவரோடு தாயபாகம் பெற்ற அதிசூரன் என்பவனுக்குபொருள் வரவு குன்றி இவருக்கு மிகுந்துவருதலைக்கண்டு பொருமைகொண்டு தன்னைப்பற்றிப் பெருமிதமடைந்து நாயனுரைப் போரில் வெல்லக் கருதிப் போரில்வெல்லுபவருக்கே வாள் வித்தை பயிற்றும் உரிமையுடைத்தாகு மென்று போர் வீருடன்சென்று நாயனுரைப் போருக்கழைத்தான். மாணுக்கர்களும் சுற்றத்தவரும புடைசூழ நாயனுர் புறப்பட்டுப் போர் செய்து அதிசூரனைத் தோற்கடித்தார்.

இவ்வாறு தோல்வியுற்ற அதிசூரன் அன்றிரவு துன்புற்றுத் துயிலிழந்து அவரை வஞ்சனையால் வெல்லும் வழி காண நினைத்தான். விடியற்காலையிலே மற்றவர்களைக் கொல்லுதலைத் தவிர்த்து தனியே போர் செய்ய வரும்படி தெரிவித்தான். அவ்வாறே நாயனுர் சென்று போர்க்களத்தில் நின்ருர். திருநீறணிந்தவர்களுக்கு நாயனுர் தீங்கிழையார் என்பதை அறிந்த அதிசூரன் நெற்றியிலே திருநீற்றைப் பூசி அதை அவர் காணுதபடி மறைத்துக்கொண்டு நாயனுர் நிற்குமிடத்தையடைந்தான். அவனைக்கொல்ல நினைந்து நாயனுர் அடி பெயர்க்குக் தருணதில் தனது நெற்றியை மறைத்த பரிசையை நீக்க நாயனுர் திருநீற்றைக் கண்டு இவன சிவனடியாயினனென்று நினைத்து இவன் கருத்தின்படி தன்னைக்கொல்லுமாறு நேரில் நின்ருர். பாதகன் தன் கருத்தை முற்றுவித்தான். உடனே சிவபெருமான் தோன்றி நாயனுர் என்றும நீங்கா அன்புடன் இன்புற்றிருக்குமாறு தம் திருவடியடைய அருள் புரிந்தார்.

அந்நின்ற தொண்டர் திருவுள்ளம்
ஆரறிவார்?
முன்னின்றபாதகனும் தன்கருத்தே
முற்றுவித்தான்
இந்நின்ற தன்மை அறிவார்
அவர்க் கருள
மின்னின்ற செஞ்சடையார்
தாமே வெளிநின்ருர்.

மற்றினிநாம் போற்றுவதென்?
வானேர் பிரான் அருளைப்
பற்றலர்தங் கைவாளால்
பாசம் அறுத்தருளி
உற்றவரை என்றும்
உடன்பிரியா அன்பருளிப்
பொற்ருெடியாள் பாகனுர்
பொன்னம்பலம் அணைந்தார்

---

பட்டுத் துணி ஆக்குவதற்கு யாழ்ப்பாணத்திலே ஒரு ஐக்கியநிலையம் அமைக்கப்படுமாம.

x x x

கொழும்பில் மழை பெய்தால் யாழ்ப்பாணத்தில் குடைபிடிக்கும் தலைவர் ... அதிசயிக்கமாட்டாது.

---

## அறிவித்தல்

யாழ்ப்பாணம் வண்ணுர்பண்ணை கிழக்கு சங்காலிங்கம் செட்டியார் மகன் ராமசாமிச் செட்டியாராகிய நான் இத்தால் அறிவிப்பது என்னவென்ருல்:— வண்ணுர்பண்ணை கிழக்கு ஐ. வீரப்பன் செட்டியார் 1952-ம் ஆண்டு ஆனி மாசம் 6-ம் திகதி யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிசு C. C. சோமசேகரம் முகதாவில் 4022-ம் இலக்கத்தில் என்னையும் இன்னுமொருவரையும் தனது அற்ருேணித் தத்துவகாரனாக நியமித்தும், நான் ஒருபோதும் எவ்விதத்திலும் அவருடைய அற்ருேணித் தத்துவகாரனுக இருந்து ஒருவிதமான வேலையும் அவருக்குப் பார்க்கவில்லை யென்று இத்தால் இலங்கையிலுள்ள பொது சனங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். மேற்படி வீரப்பன் செட்டியார் அல்லது அவரின் அற்ருேணித் தத்துவகாரன் செய்யும் எவ்விதசெயல்களுக்கும் நான் பொறுப்பாளி அல்லவென்பதையும் தெரியப்படுத்துகிறேன்.

ச. ராமசாமி

20—9—52.

M. 123 23, 26—9—52.

---



### அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம

யாழ்ப்பாணம், சிதாரி சப்பல்தெரு, 9-ம் நம்பர்வீட்டில் அடைவு பிடிப்பவர்களாகிய யோசேப் அன் கோ. மனேஜர், எஸ். பி. யோசேப் அவர்களிடம் 1846-ம் ஆண்டு மார்கழிமாதம் 21-ந் திகதி தொடக்கம் 1951-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30-ந் திகதிவரையில் வைக்கப்பட்டுத் தவணை தப்பிய அடைவ நகைகள் 1952-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 17-ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் மேற்படி இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனவு செய்யப்படுமென்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

இடாப்பு மேற்படி இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கோணமலை ஐயாத்துரை
வெந்திஸ்மேஸ்தர்.

யாழ்ப்பாணம், 16-9-52.

M. 26—9, 3—10—52.

---

திறமான **தேக்க மரங்கள்** பல தினிசுகளிலும்

திறமான **ருணிமார்க்ஓடுகள்** 13½, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

Std. 2

---

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=O=

தந்தி: "JEWELLERS"
போன்: 161.

கிளைத்தானம்:
63, கன்னுதிட்டி
யாழ்ப்பாணம்.

---

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கோடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங்கட்டுமுறை.**

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப்பற்றுவரவு.**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.**

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்.**

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியசனோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்.**

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிருப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.

---

நீங்கள் இளமைப் பருவத்தையடைய
சி. எம். சாமி




உபயோகியுங்கள்

தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகராலமருந்து வேறு ஒன்றுமில்லை.

அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், இரதத விருத்தியும் உண்டாக்கும். இல்வாழ்க்கையில் அதியற்புதசுகந்தரும. நீரழிவு பவுத்திரம், மூலம், குன்மம, இடுப்புவலி, வாய்வு, வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும்.

24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ.25—0—0

**குருபஸ்பம்** (தொய்வுக்கு)

தோய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு தொண்டைவலி, க்ஷயம் முதலிய சகல வியாதிகளையும நீக்கும். அருமையானது.

24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20

மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I
(கியாட்லாக் இனம்)

M. 16. 25-4-52—25-10-52.



Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Friday, September 26, 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org